# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (உ / தர)ப் பரீட்சை – 2025

## பெறுபேறு மீள்பரிசீலனை விண்ணப்பப்படிவம்

### நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்
### (பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு)

**பெறுபேறு மீள்பரிசீலனை குறித்த விடைத்தாள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாக பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீள்பரிசீலனை பெறுபேறாக Z புள்ளிகளில் அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தரங்களில் அதிகரித்தலோ அல்லது குறைதலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.**

1. மேற்குறித்த பரீட்சையின் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.
2. பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகிய இருவகைப் பரீட்சார்த்திகளும் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கும் போது தாமே விண்ணப்பங்களை முன்வைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பம் கோரப்படுவதானது 2026.04.06 ஆம் திகதி ஆரம்பமாவதோடு 2026.04.22 ஆம் திகதி நிறைவடையும்.
4. மீள்பரிசீலனை விண்ணப்பிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்:
   - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (https://www.doenets.lk) இனுள் பிரவேசித்து 'Our Services' என்பதின் கீழ் உள்ள 'Exam Information Centre' இன் மீது Click செய்வதன் மூலம்,
   - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ நடமாடும் தொலைபேசி பிரயோகம் (Mobile Application) ஆன DoE இற்கு சென்று நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் 'Exam Information Centre' இன் மீது Click செய்வதன் மூலம்,
   - ❖ https://onlineexams.gov.lk/eie இனுள் பிரவேசிப்பதன் மூலம்,
5. முறைமைக்குள் பிரவேசிக்கும்போது தாங்கள் (உ/தர) 2025 பரீட்சைக்குத் தோற்றியபோது பயன்படுத்திய பரீட்சை சுட்டெண் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்துதல் வேண்டும். கணக்கொன்று இல்லை எனில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளிட்டு கணக்கொன்றினை ஆரம்பித்துக் கொள்ளல் வேண்டும்.
6. இவ் விண்ணப்பப்படிவத்தை இலகுவாகவும் சரியான முறையில் பூரணப்படுத்துவதற்கு Technical Instructions மற்றும் Common Instructions ஆகிய அறிவுறுத்தல் (Video) காணொளி பார்த்தல் அவசியமாகிறது.
7. ஒரு பாடத்திற்கான மீள்பரிசீலனைச் செய்வதற்கான கொடுப்பனவு ரூபாய் 250 ஆகும். அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது கடனட்டை / வரவட்டை (Credit card / Debit card) மூலமோ பணத்தைச் செலுத்தலாம்.
8. பணத்தைச் செலுத்திய பின்பு விண்ணப்பப்படிவத்தை PDF முறையில் பதிவிறக்கம் (Download) செய்யலாம் என்பதோடு அவ் விண்ணப்பப்படிவத்தை தங்களது பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். பணத்தைச் செலுத்திய பின்பு தங்களது தொலைபேசி இலக்கத்துக்கு SMS குறுஞ் செய்தி கிடைக்கப்பெறும்.
9. நீங்கள் பெறுபேறு மீள்பரிசீலனைச் செய்வதற்கு எதிர்பார்க்கும் சகல பாடங்களோடு மீள்பரிசீலனை விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட விபரங்களைச் சரியாகப் பூரணப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். உரிய பணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கென செலுத்தப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.
10. பாட எண்: 12 - பொதுச் சாதாரணப் பரீட்சை பாடத்தில் 30 இற்குக் குறைவான புள்ளிகள் பெற்றதால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறாத விண்ணப்பதாரிகள் அப்பாடத்திற்கும் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும்.
11. இது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் தேவைப்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| மதிப்பீட்டுக் (பாடசாலைகள் பரீட்சை) கிளை | - 011-2785231 / 011 2785216 / 011 2784037 |
| உடனடி அழைப்பிற்கு | - 1911 |

**பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) கிளை,**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2026.04.06 ஆம் திகதி.**

**ஒப்பம்: ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**